புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# பண்பாட்டு உளவியல் நோக்கில் கம்பராமாயணம்

ம.வித்யா
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.

ஆய்வுச் சுருக்கம்

மனித மனங்கள் குறித்தப் புரிதல்கள் காலந்தோறும் கேள்விக்குகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. விலங்கிலிருந்து தோன்றியதாக கூறப்படும் மனிதனின் மனமானது மனித நிலைக்கும்,விலங்கு நிலைக்கும் இடையேயான போராட்டத்தைச் சந்திக்கிறது. அதே நேரத்தில் விலங்குகளுக்கும் தாய்மை போன்ற உணர்வுகள் இருப்பது வியப்பை உண்டாக்குகிறது. இதை பிராய்டு என்ற உளவியல் அறிஞரும் வாழ்விச்சை உணர்ச்சிக்கும் சாவிச்சை உணர்ச்சிக்கும் இடைபட்டது மனித வாழ்க்கை என்று கூறுகிறார். தன்இச்சை உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுக்குள் மனிதன் வைக்க முற்படும் போது அவனால் சமூகத்திற்கு நன்மை விளைகிறது. ஆனால் கட்டுப்பாட்டினை மீறும் போது தனக்கும் தன்னைச் சார்ந்த சுற்றத்திற்கும் பேரழிவை மனிதன் வரவழைத்துக் கொள்கிறான். அந்த வகையில் கம்ப ராமாயணக் கதாப்பாத்திரங்கள் தன்னிச்சை உணர்வுகளில் சிக்குண்டு தவிப்பதையும், அதை வென்று உலகிற்கு உதாரணமாகத் திகழ்வதையும் இக்கட்டுரை பண்பாட்டு உளவியல் நோக்கில் ஆராய்கிறது.

## முன்னுரை

மனவெழுச்சி நிலை என்பது நமது உணர்வுகள் மேலோங்கி நிற்கும் நனவுநிலையாகும். அதீத மகிழ்ச்சி அல்லது அதீத மகிழ்ச்சியின்மையின் போது இந்நிலை ஏற்படுகிறது. உளவியல் அறிஞர்களின் கருத்துப்படி அறிவு, உணர்வு மற்றும் உடலியக்கம் போன்றவற்றில் இந்த மனவெழுச்சி தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. கட்டுப்படுத்தப்பட்ட மனவெழுச்சிகளால் சமூகத்திற்கு நன்மை விளையும். இராமாயணத்தின் கதாப்பாத்தரங்கள் தங்களுக்கு எழும் மனவெழுச்சிகளுக்கு தரும் விளைவுகளையும் அதனால் அவர்களுக்கும், சமூகத்திற்கு ஏற்படும் இன்ப துன்பங்களையும் இக்கட்டுரை உளவியல் நோக்கில் அலச இருக்கிறது. அந்த அடிப்படையில் பண்பாடு சார்ந்த உளவியலுக்கான ஒரு அச்சாணியாக இராமாயணம் இருக்கிறதா என்பதையும் அறிவியல் அணுகுமுறையில் இவ்வாய்வுக் கட்டுரை அணுக இருக்கிறது.

## இச்சை உணர்ச்சி

மனித மனமானது உளவியல் அறிஞர் பிராய்டு என்பவரின் கருத்துப்படி

1. இச்சை மனம்
2. தன்னிலை மனம்
3. பண்பாட்டு மனம் [1] ( சங்க இலக்கியம் ஒரு பிராய்டிய உளப்பகுப்பாய்வு வாசிப்பு)

என்ற மூன்று நிலைகளில் உள்ளது. இச்சை மனமானது உயர்திணை, அஃறிணை இரண்டிற்கும் பொதுவானது. தன்பசி, தன்காமம், தன்கோபம் முதலியவற்றால் ஆளப்படும் மனிதமனம், தனது இச்சைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கிறது. ஆனால் சமூகம் உருவாக்கிய சட்டத்திட்டங்களுக்கு கட்டுப்படும் போது இச்சை மனமானது அழிந்து பண்பாட்டு மனமாக மேல்நிலையாக்கம் அடைகின்றது. பண்பாட்டு மனமானது தன்இச்சைகைளைக் கொன்று தான் மற்றுமொரு நிலைக்குச் செல்கின்றது. இதை உளவியல் தன்வதைப்பு உணர்ச்சி

என்கிறது. சாவிச்சை உணர்ச்சியின் (death instinct) இந்த ஒரு கூற்றான தன்வதைப்பு உணர்ச்சியை கம்பராமாயத்தில் பொருத்திப் பார்க்கலாம்.

இச்சை உணர்ச்சி, வாழ்விச்சை உணர்ச்சியாகவும், சாவிச்சை உணர்ச்சியாகவும் இருவகையாகப் பிரிகிறது. மனித வாழ்க்கையின் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான போராட்டத்தில் தன் இச்சையை அழித்துக் கொண்டு பிறர்நலத்துக்காக மனிதன் சிந்திக்கும் போதுதான் பண்பாடுடைய மனிதனாக கருதப்படுகிறான். இது விலங்குளைப் போல தற்காலிகமாகத் தோன்றி மறைவதில்லை. வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கண்காணிக்கப் படுகிறது.

உதாரணமாக, சங்க இலக்கியப் பாடல் ஒன்றில்,

" நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் ...."

-( புறம். 316)

இப்பாடலில் தனது பொருள்களைப் பணயம் வைத்தாவது அடுத்தவரின் பசியைப் போக்க வேண்டும் என்ற விருந்தோம்பல் பண்பு மக்களிடையே வற்புறுத்தப்படுகிறது. இதனை ஏற்றுக்கொள்ளும் மனிதமனமானது தனது இச்சைகளை வதைத்துக் கொண்டு இன்மையிலும் விருந்தோம்பல் என்னும் பண்பினைப் பெற்று பண்பாட்டு மனமாக மேல்நிலையாக்கம் பெறுகிறது. இவ்வாறு மேல்நிலையாக்கம் பெற்ற மனித மனத்தைக் கொண்ட தலைவன் மக்களால் கொண்டாடப்படுகிறான். முன்உதாரணமாகத் திகழ்ந்து மானிட வாழ்வுக்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறான்.

தசரதனின் தன்வதைப்பு உணர்ச்சி

"கண்ணுள் மணிபோல் மகவை இழந்தும் உயிர்காதலியா
உண்ணா எண்ணி இருந்தால் உலகோர் என்என்று உரையார்? "

- அயோத்தியா காண்டம் . 385

இப்பாடலில் தசரதன் அறியாமல் பார்வையிழந்த பெற்றோரின் மகனைக் கொல்ல புத்திர சோகம் தாங்காமல் இறக்கிறார்கள். இதேபோல் தசரதனும் புத்திர சோகத்தால் உயிர் துறக்கிறான். இராமன் காட்டிற்குச் சென்றான் என்று சுமந்திரன் உரைத்த மறுநிமிடம் தசரதன் தன் ஆவி நீத்தான். கைகேயிக்குத் தான் கொடுத்த வரம் பொய்க்கக் கூடாது என்பதற்காக, தன் இச்சையைப் பொருட்படுத்தாமல் உலகத்தின் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் தன்னைத் தானே தசரதன் வதைத்துக் கொள்கிறான். இங்கே தசரதனின் மனிதமனமானது, பிராய்டின் கருத்துப்படி பண்பாட்டு மனமாகத் மாறுகிறது.

கைகேயியின் இச்சை மனம்

ஆனால் கைகேயியின் மனம் தன் கணவன் தான் கேட்கும் வரத்தால் உயிர் துறப்பான் எனத் தெரிந்தும் அவள் தனது இச்சை மனத்தின் ஆளுகையையே விரும்புகிறாள். தசரதன் இறுதியாக, நாட்டை உனக்கும் உன்மகன் பரதனுக்கும் அளிக்கிறேன். ஆனால் என் உயிர் போன்ற இராமனை என் கண்ணிலிருந்து பிரித்து விடாதே என இரந்து க் கேட்கிறான். ஆனால் தான் கேட்ட இருவரமும் வேண்டும் என்கிறாள் கைகேயி.

"ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனம்ஆள,
மாய்ந்தே நான்போய் வான்உல ஆய்வென் "

- ( அயோத். 231)

நான் இறப்பேன் எனத் தசரதன் உரைப்பதை கைகேயி துளியேனும் கேட்காமல், கேட்டது கிடைத்ததால் நிம்மதியாகத் துயில்கிறாள். இங்கே கைகேயியின் இச்சை மனமே வெற்றி கொள்கிறது.

மந்தரையின் தூண்டல்

குலத்தின் புகழை அழிக்கும் வண்ணம் என் மகன் அரசாள்வது தகாது என முதலில் சினந்து கூறிய கைகேயி, பின் கோசலையிடம் நீ இரந்து வாழ்வாய், உனது தந்தைக்கும், உனது புதல்வனுக்கும் உன்னால் பெரும்பழி உண்டாகும் என்றும் மந்தரை கைகேயியின் மனம் திரிக்கிறாள். ஆகவே மேல்நிலையாக்கம் பெற்ற பண்பாட்டு மனமும் பிறரின் தூண்டுதலால்

*மீண்டும் இச்சை நிலைக்கே திரும்பக் கூடும் என்பது கைகேயி கதாப்பாத்திரம் மூலம் தெளிவாகிறது. ஆகவே பண்பாட்டு மனத்தை தக்கவைத்துக் கொள்ள தொடர் கண்காணிப்பு அவசியம் என்பது வெள்ளிடை மலை.*

*" தீய மந்தரை இவ்வுரை செப்பலும், தேவி*
*தூய சிந்தையும் திரிந்தது"*

*- (அயோத்.176)*

*இராமனது பண்பாட்டு மனம்*

*அரச மகுடம் தனக்கு இல்லை, கானகம் செல்ல வேண்டும் என்பதை அறிந்தும். இராமன் சிறிதும் கலங்காமல் மன்னவன் கட்டளையை ஏற்று நடப்பது என் கடன் என்கிறான். தனது இச்சை, தனது சுற்றத்தார் மற்றும் நாட்டு மக்களின் ஆசைகளையும் அறம் என்னும் பண்பாட்டிற்காக துறக்க முற்படுகிறான். தன் வதைப்பு என்னும் உணர்ச்சியில் இராமன் ஆழ்ந்திருந்தான். இராமனிடத்தில் இச்சை உணர்வு எழவில்லை.*

*" எந்தை நீ இரதம் இன்னே தூண்டினை மீள நோக்கிச் சுவட்டையோர்ந்து*
*என்னை அங்கே மீண்டனன் என்ன மீள்வர் இது நின்னை வேண்டிற்று என்றான். "*

*-( அயோத். 556)*

*என் மீது பேரன்பு கொண்டு என்னைப் பின்தொடர்ந்த நாட்டு மக்களின் மனதை காயப்படுத்த விரும்பாமல் அவர்கள் உறங்கிய பின்பு சுமந்திரனை அயோத்திக்குத் திரும்ப அனுப்பித் தனது பண்பாட்டு மனத்தை இராமன் மெய்ப்பிக்கிறான்.*

*இராமன் – குகன் நட்பு*

*குகப்படலத்தில் இராமன் விடைபெற்றுச் செல்லும் போது குகன் தானும் உடன் வருவதாகக் கூறினான். ஆனால் இராமனோ, உன்னோடு ஐவரானோம். என்னைக் காக்க உன்தம்பி இலக்குவனன் உள்ளான் என அவனுக்கு ஆறுதல் கூறி அவனை நீங்குகிறான். தன் நாட்டு மக்களின் அன்பு மற்றும் சகோதரனுக்கு நிகரான அன்பு இரண்டிற்கும் அடிபணியாமல் தன் கடமையே பெரிதென எண்ணிச் செல்கிறான் ( குகப். 699) இங்கும் இராமனின் மேல்நிலை ஆக்கப்பட்ட பண்பாட்டு மனத்தை காண முடிகிறது.*

*சூர்ப்பணகை படலம்*

*சூர்ப்பணகைப் படலத்தில் இராமனை கண்டதும் அவன் மீது மையல் கொண்டு தன்னோடு கூடி வாழும் படி இறைஞ்சுகிறாள். ஆனால் இராமனோ மறுக்கிறான். இராமன் மறுத்ததும் இலக்குவனனை கூட வேண்டும் என்றும் சீதையைக் கொல்ல வேண்டும் என்றும் துணிகிறாள். அதனால் கோபமுற்ற இலக்குவனன் அவளது மார்பு மற்றும் மூக்கினை அறிகிறான். அப்போதும் தன்னை ஏற்றுக்கொள்ளும் படி கேட்கிறாள். அதற்கு இராமன்,*

*"இகல் அரக்கர் குலந்தொலைப்பான் தோன்றி நின்றோன்*
*போடு அகலப் புல்லொழுக்கை வல்லரக்கி என்றிறைவன் புகலும்"*

*– ( ஆரணிய. 135)*

*அழகின் அம்சமாக தன்னை மாற்றிக் கொண்ட போதும் இராமன் தனதுமன இச்சைக்கு இடம் கொடாமல் தனது அவதார நோக்கத்தை சூர்ப்பணகையிடம் எடுத்துரைக்கிறான். சூர்ப்ணகையின் தன் இச்சை உணர்வு தசரத புதல்வர்களை அடைவதையே நோக்கமாகக் கொண்டிருந்ததால் அவர்கள் கூறிய வார்த்தைகளை ஏற்காமல் தண்டிக்கப் படுகிறாள்.*

*சூர்ப்பணகையின் தன்இச்சை உணர்வு*

*தன் இச்சை உணர்வு மிகுதியால் தன் நலமெல்லாம் இழந்த கைகேயி போல சூர்ப்பணகையும் இராமன் மீது கொண்ட காமத்தால் தன் அழகு நலமெல்லாம் இழக்கிறாள். இருப்பினும் தன் காம இச்சையை அடக்க இயலாமல் அதை அடைய இடையிலே நிற்கும் அழகே வடிவம் கொண்ட சீதையை இராவணனுக்கு தாரம் ஆக்கினால் தான் இராமனை அடையலாம் என எண்ணுகிறாள்.*

*" சீதையெனும் மான் கொண்டு உண்டாட நீயுன்*
*யான் கொண்டு உண்டாடும் வண்ணம்*
*இராமனைத் தருதி என்பால்" - (ஆரணிய. 79)*

*சீதையின் அழகை சூர்ப்பணகை வர்ணித்த போதே தன் சுற்றம், தன் பலம் உள்ளிட்ட அனைத்தையும் மறந்தான். சீதை மீது கொண்ட தாபம் நாளுக்கு நாள் அவனிடம் அதிகரித்தது. நோக்குபவை எல்லாம் அவையே போறல் என்னும் அகப்பொருள் மரபு படி காணும் இடம்தோறும் இராவணனுக்கு சீதையே தென்படுகிறாள். அவனது துன்பத்தை உணர்ந்த சூர்ப்பணகை சீதையைக் கவர்ந்து வருமாறு இராவணனுக்கு அறிவுரை வழங்குகிறாள். செய்வதறியாது, காமத்தில் மூழ்கி இருந்த இராவணன் அவள் கூறிய வார்த்தைக்கு செவிசாய்க்கிறான்.*

*இராவணனின் தன்இச்சை உணர்ச்சி தான் அவனது அரக்கர் குலமே முற்றிலும் அழிய காரணமாக அமைந்தது. தன் இச்சை உணர்வை கட்டுப்படுத்தாவிட்டால் அது எந்த நிலைக்கு ஒருவனை இட்டுச் செல்லும் என்பதற்கு இராவணனும், சூர்ப்பணகையுமே மிகச் சிறந்த உதாரணங்களாகும்.*

*வாலியின் இச்சை மனமும், பண்பாட்டு மனமும்*

*அடுத்ததாக இராமயணத்தின் முக்கியமாக கதாப்பாத்திரமாகத் திகழும் வாலியின் உணர்வெழுச்சிகளைக் காண்போமேயானால், வாலி தன்தம்பி சுக்ரீவன் தன்னிடம் சரணடைந்தும் பதவியை வாலிக்கே அளித்த போதிலும் வாலி சினம் தீராதவனாக இருந்தான். அவனது மனைவி உருமை என்பாளைக் கவர்ந்துச் சென்றான். வாலியின் மனைவி தாரை எவ்வளவோ எடுத்துரைத்தும் என்னை எதிர்ப்போர் எவரும் இல்லையென தன் இச்சை உணர்ச்சியில் மிகுந்தான். இராம பானம் தன்னைத் தாக்கியபோது தான் தன்னை அழிப்பவரும் உண்டு என்பதை உணர்கிறான். அப்போதும் தன்இச்சை உணர்ச்சியான வீரம் மிகுந்த நிலையில் , பல்வேறு கேள்விக் கணைகளை இராமனிடம் தொடுக்கிறான். அவனுக்கு பலவாறு விளக்க மளித்த இராமன்,*

*''எக்குலத்து யாவர்க்கும் வினையினால் வரும் மேன்மையும்*
*கீழ்மையும் அனைய தன்மை அறிந்தும் அழித்தனை*
*மனையின் மாட்சி என் றான் மனு நீதியான்''*

*– (வாலி வதைப்படலம் – 361)*

*அறிந்தே செய்தால் அது குற்றமாகும் என்று கூறுகிறான். இதனை ஏற்றுக்கொண்ட வாலியின் மனமானது, தன்இச்சை உணர்விலிருந்து, பண்பாட்டு மனமாக மாற்றம் பெறுகிறது. பிறவிகளே இல்லாத பரமபதத்தை தனக்கு அளிக்குமாறு இராமனிடம் வேண்டுகிறான். குரங்கினமாக இருந்தாரும் வாலியின் இச்சை மனம், பண்பாட்டு மனமாக மாற்றம் பெற்று பரமபதம் என்னும் பேரின்பத்தை அடைந்தது என்பதை இப்படலத்தின் வழி கம்பர் பதிவுசெய்கிறார்.*

*சீதாவின் தன் வதைப்புணர்ச்சி*

*''விழுதல், விம்முதல், மெய்யுற வெதும்பல், வெருவல்*
*எழுதல் ஏங்கதல், இரங்குதல், இராமனை எண்ணித்*
*தொழுதல், சோருதல், துளங்குதல், துயருழந்து உயிர்த்தல்*
*அழுதல் … … … ''*

*- (சுந்தர காண்டம். 333)*

*இராமனை நினைத்து நினைத்து சீதை தன்னையே வருத்திக் கொள்ளும் நிலையினை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது. அவளது கண்களில் இருந்து கடலென கண்ணீர் பெருகி ஓடியது. தன்னையே வதைத்துக் கொள்ளும் உணர்ச்சியின் எல்லையில் இருந்த போதும் சீதை, அனுமன் அழைத்தபோது வர மறுக்கிறாள். நான் அவ்வாறு செய்தால் மன்னவனின் கோதண்டத்திற்குப் பழி உண்டாகும் என அஞ்சுகிறாள். இவ்விடத்தில் சீதையின் இச்சை மனமானது பண்பாட்டு மனமாக மாற்றம் பெறுகிறது. தனது கற்பை மெய்ப்பிக்க தன் கணவனே வந்துத் தன்னைக் காக்க வேண்டும் என்கிறாள்.*

*'' எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்*
*சொல்லினால் சுடுவேன் அது தூயவன்*
*வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்''*

*– (சுந்தர காண்டம் - 622)*

*இராமனின் தன்இச்சை உணர்ச்சி*

*கம்ப ராமாயணத்தில் பல்வேறு இடங்களில் தன் வதைப்பு உணர்ச்சியைக் கையாண்ட இராமனிடமும் சில தருணங்களில் இச்சை உணர்ச்சிகள் வெளிப்படவே செய்தன. சீதையின் சூளாமணியைக் கண்டவுடன் இராமனிடத்தே, பல்வேறு மெய்ப்பாடுகள் தோன்றின. மயிர்கள் சிலிர்த்தல், கண்களில் நீர் வழிதல், மார்பும் இருதோள்களும் புரித்தல், வியர்வைத் துளிகள் தோன்றுதல் போன்ற மெய்ப்பாடுகள் தோன்றின.*

*"ஆவி வருவது போவ தாகி தடித்தது மேனி*
*யார் உளர் தன்மை தேர்வார்?"*

*- (சூளாமணிப் படலம் 1332)*

*கும்பகர்ணன் வதைப்படலம்*

*பிறர் தாரத்தைக் கவர்தல் அறச்செயல் அன்று. இதனால் நமது உயிர் மாயும் என கும்பகர்ணன் கூறியபோதும் இராவணன் தன்னிச்சை உணர்ச்சியில் மிகுந்துஇருந்தமையால் கும்பகர்ணன் கூறிய சொல்லைக் கேட்கவில்லை. இறப்பு உறுதி என்பதை நிச்சயத்து தான் கும்பகர்ணன் போருக்கு எழுந்தருளினான். கும்பகர்ணன், விபீடணன். என தம்பியர் எவ்வளவோ அறம் கூறியும் இராவணனிடத்தில் அவனது காம உணர்ச்சியே மேலோங்கி இருந்தது. அதனால் ஒருவர் பின் ஒருவராக இராவணன் போரில் இழக்கிறான்.*

*இந்திரச்சித் இறப்பின் போது இராவணன் புலம்புதல்*

*இந்திரசித் இறப்பின் போதுதான் இதுவரை தான் காம மயக்கத்தால் பீடிக்கப்பட்டு இருந்துஇருக்கிறோம் என்பதை இராவணன் உணர்கிறான். நீ எனக்கு செய்ய வேண்டிய ஈமச் சடங்குகளை ஒரு பெண்ணால் நான் உனக்குச் செய்யும் படி ஆனதே என வருந்துகிறான்.*

*" நேரிழை ஒருத்தி நீரால் எனக்கு நீ செய்யத் தக்க*
*கடன் எலாம் ஏங்கி ஏங்கி உனக்கு நான் செய்வதானேன் "*

*-( இராவணன் சோகப் படலம். 931)*

*தனது மகனின் இறப்பிற்குப் பின்பு தன்இச்சை உணர்ச்சியின் கட்டுப்பாட்டிலிருந்து இராவணன் விடுபடுகிறான்.*

*விபீடணன் புலம்பல்*

*இராவணின் இறப்பிற்குப் பின்பு ,விபீடணன் போர்மகளைத் தழுவினாய், புகழ்மகளைத் தழுவினாய், திருமகளையும் தழுவிய நின் கரங்கள் பொறாமை மிகுந்ததால், சீதா பிராட்டியைத் தழுவ நினைத்தாய். அதனால் உயிர் கொடுத்து பழி கொண்டாய் எனப் புலம்புகிறான்.*

*" உயிர் கொடுத்துப் பழிகொண்ட பித்தா பின்னைப்*
*பார்மகளைத் தழுவினையோ "*

*– ( மேலது. 1641)*

*இராவணின் காம உணர்ச்சியே அவனுக்கு அழிவைத் தேடித் தந்தது என்று புலம்புகிறான் விபீடணன்.*

*சீதை தீப்பாய்தல்*

*இராமன் இராவண வதைப்பிற்குப் பின்பு சீதையிடம் கடுமையான கோபம் கொள்கிறான். தன் மனைவியை மாற்றான் சிறை செய்தான் . அவனை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டான் இராமன் என்னும் பழி தோன்றாமல் இருக்கவே உன்னைக் காத்தேன். என்கிறான் நீ ஒருத்தி தோன்றியதால் பெண்மையின் அனைத்து குணங்களும் அழிந்தன என்கிறான்.*

*" பெண்மையும், பெருமையும் பிறப்பும், கற்பெனும்*
*திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும் "*

*-( மீட்சிப் படலம் – 1734)*

*இராமனுடைய கோபமெனும் தன்இச்சை உணர்ச்சியே சீதையைத் தீக்குளிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.*

முடிவுரை

*வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான போராட்டத்தில் வாழ்விச்சை உணர்ச்சிகளும், சாவிச்சை உணர்வுகளும் மாந்தர்களை ஆள்கின்றன. தன்இச்சை உணர்ச்சிகள் கட்டுக்குள் இருக்கும் போது அது பண்பாட்டு மனமாக மேல்நிலையாக்கம் பெற்று சமூகத்திற்கு நன்மை பயக்கிறது. அதே தருணத்தில் இச்சை உணர்ச்சிகள் எல்லை மீறும் போது அது தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் அழிக்கிறது. அந்த வகையில் பண்பாட்டு உளவியல் நோக்கில் இராமாயணக் கதாப்பாத்திரங்களை இக்கட்டுரை ஆய்வு செய்துள்ளது.*

மேற்கோள்


1. *சங்க இலக்கியம் ஒரு பிராய்டியஉளப்பகுப்பாய்வு வாசிப்பு , அரங்க நலங்கிள்ளி – பரிசல், 2019*
2. *கம்ப ராமாயணம் மூலமும் உரையும், திருமகள் நிலையம், 2006.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********